பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 20 | புதன்கிழமை | 03.04.2024 | அதிர்வு 246

## வடக்கில் அநுரவின் போஸ்டரால் குழப்பம்

### கல்விப்புலத்தில் அதிருப்தி

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் வருவதை முன்னிட்டு ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களால் வடக்கு மாகாணக் கல்விப்புலத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. 06

# ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரிக்க 9 பேரடங்கிய ஆணைக்குழு

## தான் ஜனாதிபதியானால் இது உறுதி என்கிறார் சஜித்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தான் நேற்று முன்தினம் கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்காத காரணத்தினாலும், அதற்கு அரசு நீதி வழங்காத காரணத்தினாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியவர்களைத் தேடி அறிவதற்குத் தான் பின்பற்றும் வழிமுறைகள்குறித்துஎதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தினார். 07

## இன்று இலங்கை திரும்புகின்றனர் முருகன், றொபட் பயஸ், ஜெயக்குமார்



(ந.லோகதயாளன்)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றச்சாட்டில் கைதாகிப் பல ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 07




சட்டங்கள், ஒழுங்கு விதிகளை மீறி, மதுபான சாலைகளைத் திறப்பதற்கான உரிமங்கள் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள் பலருக்கும் எண்ணுக்கணக்கின்றி அள்ளி வீசப்படுகின்றன, தேர்தல் செலவினத்தை எதிர்கொள்வதற்கான மார்க்கம் என்ற பெயரில் இந்தப் புதிய சந்தை திறந்து விடப்பட்டிருக்கின்றது என நேற்று இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தேன்.

இவ்விடயத்தை ஒட்டிய விவகாரம் உயர் நீதிமன்றத்தில் நேற்று பரிசீலனைக்கு வருகின்றது, உயர் நீதிமன்றம் அரசியல் தலைமைகளுக்கு மறைமுகமாகக் 06



# ஞானசாரருக்கு பிணை வழங்க நீதிமன்று மறுப்பு



## கோரிக்கை மனு நிராகரிப்பு

**நான்கு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கலகொட அத்தே ஞானசார தேரர், தம்மை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையை நீதிபதி ஆதித்ய பட்டபெதிகே நேற்று நிராகரித்துள்ளார்.**

**பிரதிவாதிக்கு பிணை வழங்கும் அளவிற்கு விசேட காரணிகள் ஏதும் மன்றில் முன்வைக்கப்படவில்லை என நீதிபதி இதன்போது தெரிவித்தார்.**

இன, மத நல்லிணக்கத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட இரண்டு குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றவாளியாக காணப்பட்டதை அடுத்து, கடந்த 28 ஆம் திகதி தேரருக்கு நான்கு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்றம் வழங்கிய தண்டனை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த மேன்முறையீட்டுக்கு உட்பட்டு தகுந்த பிணை நிபந்தனைகளுடன் அவரை விடுவிக்குமாறு பிரதிவாதி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

மேலும், தனது சேவைபெறுநர் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளமையைக் கருத்தில் கொண்டு அதனை விசேட காரணமாகக் கருதி, தண்டனை உத்தரவை திரும்பப் பெற வேண்டும் எனவும் அவர் நீதிமன்றத்தில் கேட்டுக்கொண்டார்.

மேன்முறையீட்டை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு எடுக்கும் கால அவகாசம், தண்டனையை நிராகரிப்பதற்கான விசேட காரணியல்லவென சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி சதுரங்க பண்டார தெரிவித்தார்.

அத்துடன், பிரதிவாதியான கலகொட அத்தே ஞானசார தேரர், தனது உடல் நிலை மோசமாக உள்ளதை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை எனவும் பிரதிவாதியின் கோரிக்கையை நிராகரிக்குமாறும் சட்டத்தரணி சதுரங்க பண்டார குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை பரிசீலித்த நீதிபதி, அரசு தரப்பு சட்டத்தரணி முன்வைத்த காரணிகளை தமது நீதிமன்றம் ஏற்றுக்கொள்வதாகவும், பிரதிவாதியின் கோரிக்கையை நிராகரிக்கின்றோம் எனவும் அறிவித்தார்.

# தோட்ட மக்களுக்குக் காணி உறுதிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

தோட்ட மக்களுக்கான காணி உரிமைகளை வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2024 வரவு - செலவுத் திட்ட யோசனை ஊடாக இந்த திட்டம் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் பிரதேச பெருந்தோட்டக் கொம்பனிகள் மற்றும் அரசுக்கு சொந்தமான பெருந்தோட்டக் கொம்பனிகளின் தோட்டங்களில் வசிக்கும் 4,151 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள் ளனர்.



இவர்கள் தற்போது நிரந்தரமாக வாழும் காணிகளுக்கான உறுதிகளை வழங்குவதற்காக ஜனாதிபதி மற்றும் நீர்வழங்கல், தோட்ட உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட ஒருங்கிணைந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# சுற்றுலாத் துறைக்கு ஆயிரம் வாகனங்கள்

இலங்கையின் சுற்றுலாத் துறைக்காக 1,000 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, 6 முதல் 15 பயணிகள் அமரக்கூடிய 750 வான்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 16 முதல் 30 இருக்கைகள் கொண்ட சிறிய ரக பஸ்கள் அல்லது 30 முதல் 45 இருக்கைகள் கொண்ட பெரிய பஸ்கள் உட்பட 250 பஸ்களை இறக்குமதி செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# வங்கித் திருத்தச் சட்டமூலம் திருத்தமின்றி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது



அரச வங்கிகள் உள்ளிட்ட நாட்டின் வங்கி கட்டமைப்பில் தாக்கம் செலுத்தும் மிகவும் முக்கிய சட்டத்திருத்தமான வங்கித் திருத்தச் சட்டமூலம் நாடாளு மன்றத்தில் நேற்று விரிவான விவாதம் இன்றி நிறைவேற்றப்பட்டது.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி சார்பில் உரையாற்ற வேண்டியிருந்த நாடாளு மன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன் னமாகியிருக்காததால், சட்டமூலம் மீதான விவாதத்தை இடைநடுவே நிறுத்த நேரிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கடன் வசதி திட்டத்திற்கு அமைய நடைமுறைப்படுத்தப்படுகின்ற பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக் கைகளில் வங்கி திருத்தச் சட்டமூலமும் உள்ளடங்குகின்றது.

அரச வங்கி உள்ளிட்ட நாட்டின் வங்கி கட்டமைப்பில் பல மாற்றங்களுக்கு வித்திடுகின்ற சட்டத் திருத்தங்கள் இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

மத்திய வங்கி சட்டம் நிறைவேற் றப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத் திரமுள்ள வங்கிகளை மேற்பார்வை செய்யும் நடைமுறையை மாற்றத்திற் குட்படுத்துதல், அனுமதிப்பத்திரமுடைய வணிக வங்கிகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சட்டங்களை மாற்றுதல், வெளிநாட்டு வணிக வங்கிகளை இலங் கையில் ஆரம்பிப்பது தொடர்பிலான புதிய சட்ட ஏற்பாடுகளை கொண்டு வருதல், அனுமதிப்பத்திரமுடைய வங்கி அல்லது பங்கினை விற்பனை செய்தல் உள்ளிட்ட பாரதூரமான சட்டத் திருத்தங் கள் இதில் உள்ளடங்கியிருந்தன.

எனினும், சபையில் கோரம் இன்மை யால் நாடாளுமன்ற விவாதத்தை பிற்பகல் ஒரு மணியளவில் முடிவுக்கு கொண்டுவர நேரிட்டமையை பிரதி சாபநாயகர் அஜித் ராஜபக்ஷ அறி வித்தார்.

இதனையடுத்து, நேற்று மாலை 4 மணிக்கு நாடாளுமன்ற சபை அமர்வு மீண்டும் ஆரம்பமானதுடன், வங்கி திருத்தச் சட்டமூலம் மூன்றாம் வாசிப்பின் போது திருத்தங்களின்றி நிறைவேற் றப்பட்டது.




# 4 விமானங்களைக் குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கு அனுமதி

தொடர்ச்சியாக நட்டமடைந்து வரும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு மாதாந்தம் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிட்டு நான்கு விமானங் களை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி யுள்ளது.

நான்கு விமானங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீ காரம் வழங்கியுள்ளது.

ORIX Aviation நிறுவனத்திடமி ருந்து மாதாந்தம் 3,60,000 அமெரிக்க டொலர் குத்தகைக்கு, 6 ஆண்டுகளுக்கு இரு விமானங்களை கொள்வனவு செய்ய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதற்கு மேலதிகமாக 3,65,000 அமெரிக்க டொலர் குத்தகைக்கு 8 ஆண்டுகளுக்கு Aergo Capital Limited நிறுவனத்திடமிருந்து இரு விமானங் களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படவுள்ளது.

2021 ஆம் ஆண்டு 45,231 மில்லி யன் ரூபா நட்டத்தை அடைந்த ஸ்ரீலங் கன் விமான நிறுவனம், 2022 ஆம் ஆண்டில் 1,66,369 மில்லியன் ரூபா நட்டத்தை அடைந்தது.

2023 ஆம் ஆண்டிலும் 73,621 மில்லியன் ரூபா நட்டத்தை எதிர்நோக் கிய ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தை மறுசீரமைப்பதற்காக தற்போது முதலீட்டாளர்களிடமிருந்து யோசனைகள் கோரப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான நட்டத்திற்கு மத்தியில் ஸ்ரீலங்கன் விமான நிறுவனத் தின் சில விமானங்களை பழுதுபார்க்க வும் முடியாமற்போயுள்ள நிலையில், மேலும் 4 விமானங்களை குத்தகைக்கு பெறுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத் திடுவதற்கான அனுமதியை அமைச்ச ரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இப்தார் நிகழ்வுகள் ஒஸ்மானியாவில்!

(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் நேற்று பிற்பகல் 6.30 மணியளவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இப்தார் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில், விருந்தினர் வரவேற்கப்பட்டு கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

பின்னர் கல்லூரி மண்டபத்தில் இப்தார் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்களுக்கு குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதி வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தி.ஜோன் குயின்ரஸ், சர்வமத தலைவர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# வடக்கில் வீதி விபத்துக்களில் கடந்த வருடம் 201 பேர் மரணம்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 201பேர் உயிரிழந்துள்ளனர் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு வழங்கியுள்ள பதிலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

201 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும், அதில் 201 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிக விபத்துச் சம்பவங்களும், அதிக உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இம்மாவட்டத்தில் கடந்த வருடம் 84 விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும், அதில் 88 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடும்ப வன்முறைகளைத் தீர்க்க புதிய சட்டம் கொண்டுவரப்படும்

## மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவிப்பு



"தற்போதைய குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து புதிய சட்டமூலமொன்றை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்பித்த பின்னர் தேசிய மகளிர் ஆணைக் குழுவை ஸ்தாபிக்க வாய்ப்புக் கிட்டும்."

– இவ்வாறு மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலத்திற்கு 04.03.2024 அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்ததோடு, 03.07.2024 வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டது. அதனை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவிருப்பதோடு, தேசிய மகளிர் ஆணைக்குழு அமைப்பதற்கான நியதிகளும் அதற்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியமும் 20.03.2024 நாடாளுமன்றத்தில் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் தொடர்பான கலந்துரையாடலை நடத்தியிருந்தது. ஜனாதிபதி அலுவலகம், சட்டமா அதிபர் திணைக்களம், சட்ட வரைஞர் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலம் தொடர்பில் உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, ஒரு வாரத்திற்குள் அந்த அவதானிப்புகளை பரிசீலிக்க இலங்கையின் மகளிர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். அதில் திருத்தங்கள் இருக்கும் பட்சத்தில் மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்பிக்க நாடாளுமன்ற பெண் உறுப்பினர்கள் ஒன்றியத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் பெண்கள் சார்பில் அவருக்கு நெருக்கமான ஒருவர் வழக்குப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு உள்ளிட்ட பல முக்கிய விடயங்களும் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதோடு, நடைமுறையிலிருக்கும் குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து புதிய சட்டமாக நாடாளுமன்றத்தில் சமர்பிக்கவும் அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, மாத்தறை, மட்டக்களப்பு, அநுராதபுரம், மொனராகலை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பெண்களுக்கான 11 தற்காலிக தடுப்பு நிலையங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், பாலின சமத்துவ சட்டமூலத்திற்கும் அமைச்சரவை அனுமதி அளித்திருப்பதோடு, வர்த்தமானியில் அறிவிப்பதற்காக அரச அச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. மேலும், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு இல்லங்களை நிர்வகிப்பதற்கான தேசிய வழிகாட்டுதல்களுக்கும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது." – என்றார்.

## இந்தியாவைச் சேரந்த இரு சிறுவர்கள் உட்பட

# மூவர் இன்று தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்கு நீந்திப் பயணம்



(ந.லோகதயாளன்)

இந்தியாவைச் சேர்ந்த 7 மற்றும் 9 வயதுச் சிறுவர்கள் உட்பட மூவர் இன்று தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கு நீந்திச் செல்கின்றனர்.

இரு குடும்பங்களைச் சேர்ந்த மூவரே இவ்வாறு நீந்திப் பயணிக்கவுள்ளனர்.

இவ்வாறு நீந்திப் பயணிப்பவர்களில் 37 வயது தந்தை, 9 வயது மகள் ஆகியோருடன் 7 வயது சிறுவனும் அடங்குகின்றனர்.

நீந்திச் செல்லும் பயணத்துக்காக நேற்று மேற்படி மூவர் உள்ளிட்ட 28 பேர் இரண்டு படகுகளில் இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாருக்கு வருகை தந்துள்ளனர்.

இன்று காலை 5 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நீச்சலில் பங்குபற்றும் 7 வயது சிறுவன் தமிழகம் மரையன் பொலிஸின் பொலிஸ் அத்தியட்சகரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குட்டு வைக்கும் விதத்தில் இடைக்காலத் தடை உத்தரவை விடுக்க வாய்ப்பு உண்டு என்று நேற்று இப்பத்தியில் எதிர்வு கூறியிருந்தேன். அதேபோன்று இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நான் எதிர்வு கூறியது நடந்திருக்கின்றது. அதுவல்ல விடயம். இவ் விவகாரத்தை ஒட்டி நேற்று உயர் நீதிமன்றத்தில் அரங்கேறிய நாடகம்தான் கவனிக்க வேண்டிய அம்சம்.

கடந்த வருடத்தில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க நமது அரசியல் கிழட்டு நரியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாண்ட தந்திரம் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தும் முழு அதிகாரமும் தேர்தல் ஆணைக் குழுவுக்கே உரியது. ஆனால் தாம் நிதி அமைச்சர் என்ற முறையில் தேர்தலுக்கான செலவினத்துக்குரிய நிதியை வழங்காமல் வெட்டுவதன் மூலம் அந்தத் தேர்தலுக்கு ஆப்படித்தார் நிதி அமைச்சருமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்த விடயம் நீதிமன்றுக்குச் சென்றதும் நீதித்துறையை அச்சுறுத்தி அடக்கும் ஒரு காய் நகர்த்தல் அவர் பக்கத்தில் இருந்து புறப்பட்டது.

நிதி அமைச்சர் என்ற முறையில் நிதி ஒதுக்கீடுகளை செய்வது நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்க வேண்டிய விடயம், நாடாளுமன்றத்தின் சார்பில் நிதி அமைச்சர் அந்தக் கடமையை ஆற்றுகிறார், அதில் வேறு துறைகள் – அமைப்புகள் – தலையிடக்கூடாது, தலையிட முடியாது – என்ற ஒரு செய்தியை பகிரங்க உரையாக வெளியிட்டார் நிதி அமைச்சருமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அதாவது, நிதியமைச்சர் என்ற முறையில் நிதி ஒதுக்கீடுகளை செய்வது நாடாளுமன்றத்தின் ஆட்சித் துறை தத்துவம் சார்ந்தது. அதில் நீதிமன்றம் தலையிட முடியாது, தலையிடக்கூடாது என்ற எச்சரிக்கைதான் அந்த வடிவத்தில் வந்தது.

அந்த எச்சரிக்கை விவகாரத்தை காப்பரணாக வைத்துத்தான் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நிதி ஒதுக்கீடு செய்யாமல் அதை இழுத்தடித்து வருகின்றார் ரணிலார்.

அதே பாணி அணுகுமுறை இந்த வழக்கை ஒட்டியும் அரசுப் பக்கத்திலிருந்து நேற்றும் முன்தினமும் வெளிப்பட்டது.

மதுபானசாலை உரிமங்களை வழங்குவதும், விற்பதும், வரி அறவிடுவதும் நாட்டின் அரசினது வருமானம் ஈட்டும் விவகாரம், அது தொடர்பில் நாடாளுமன்றுக்கு உள்ள சிறப்புரிமையில் உயர் நீதிமன்றம் தலையிடக்கூடாது, தலையிட முடியாது, இந்த விடயத்தில் தலையீடு செய்யும் விதத்தில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றது, இது தவறு, ஆகவே இது குறித்து நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழு விசாரணை செய்ய வேண்டும் என்று நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் ஆளும்தரப்பின் எம்.பி. ஒருவர் வலியுறுத்தி உரையாற்றினார். அவரது கோரிக்கையை ஏற்று, அந்த விடயத்தை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு சபாநாயகர் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கும் செய்தி ஒன்று அரசு பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' இல் நேற்றுப் பிரசுரமாகியிருந்தது.

நேற்றுப் பிற்பகல் மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மூன்றும் உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிர்த் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர் அந்தச் செய்தியை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

இந்த விடயத்தில் நாடாளுமன்றச் சிறப்புரிமை சம்பந்தப்பட்டிருப்பதால், அது பற்றித் தீர்மானிக்க இந்த வழக்கு விசாரணையை நிறுத்தி, விவகாரத்தை ஐந்து நீதியரசர்கள் ஆயத்துக்கு மாற்ற வேண்டும் என்று கோரி நீண்ட வாதாட்டத்தை அவர் முன் வைத்தார்.

அதாவது இப்படி மதுபானச் சாலை உரிமங்களை வழங்குவதும், அதன் மூலம் வரி மற்றும் அறவீடுகளைப் பெறுவதும் நிதி அமைச்சர் என்ற முறையில் நாடாளுமன்றத்துக்குப் பதிலளிக்க வேண்டிய விடயங்கள், நாடாளுமன்றத்தின் விசேட உரிமை, அதில் நீதிமன்றம் தலையிடக்கூடாது என்று வழக்குக்கு முழுமையாக ஆப்படிக்க முயற்சி எடுக்கப்பட்டது.

மேற்படி மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் தாக்கல் செய்த மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்.ஏ.சுமந்திரன், சஞ்சீவ ஜெயவர்த்தன, சாலிய பீரிஸ் ஆகியோர் காத்திரமான பதில் சட்ட வாதங்களை முன் வைத்தனர்.

அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் இரண்டு மாதங்களில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது அரசமைப்பு ஏற்பாடு, இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு ஒரு வருடமாகின்றது, ஆறு, ஏழு தவணைகள் விசாரணைகளின் பின்னர் இத்தகைய பூர்வாங்க ஆட்சேபனையை எழுப்புவதை ஏற்கக் கூடாது என்றனர் மூவரும்.

இச்சமயத்தில் அரசு தரப்பில் முன்னிலையான பிரதி சொல்லிஸிட்டர் ஜென்ரல் கனிஷ்க டி சில்வா அம்மையாரின் கருத்தையும் மன்று செவிமடுத்தது.

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு முரணாக யாருக்கும் மதுபான சாலை உரிமங்கள் வழங்கப்படவில்லை என்று அவர் கூறியவற்றையும் நீதிமன்றம் பதிந்தது.

வழமைக்கு மாறாக சட்டத்தரணிகளின் முக்கிய வாதங்களை அவர்களின் குரலில் நீதிமன்றம் ஒலிப்பதிவும் செய்தது.

அதன் பின்னர் மன்றின் இடைக்கால உத்தரவு வழங்கப்பட்டது. அது பின்வருமாறு அமைந்தது:-

1. ஐந்து நீதியரசர்கள் முன்னிலையிலான விசாரணைக்கு உத்தரவிடும் அதிகாரம் இந்த மன்றுக்கு இல்லை. அதற்கான விண்ணப்பம் பிரதம நீதியரிடம்தான் சமர்ப்பிக்க வேண்டும். அதனால் அக்கோரிக்கை குறித்து இந்த நீதிமன்று எந்த முடிவும் எடுக்கவில்லை.

2. மேற்படி உரிமங்கள் வழங்குவதற்கலால் சட்டங்கள் மற்றும் அவ்வப்போது வெளியிடப்பட்ட கலால் ஒழுங்கு விதிகள் உள்ளன. அவை நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள். ஆகவே அவற்றுக்கு அமைவாக மட்டுமே உரிமங்கள் வழங்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் பணிப்பது நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையை மீறும் விடயம் அல்ல. மாறாக, நாடாளுமன்றத்தின் உரிமைகளை நடைமுறைப்படுத்தும் – நிலைநாட்டும் – அம்சம்தான்.

3. இந்தச் சட்டங்கள், ஒழுங்கு விதிகளுக்கு மாறாக உரிமங்கள் வழங்கப்படக் கூடாது என இடைக்காலத் தடை விதிக்கின்றோம்.

– இதுதான் நேற்றைய உத்தரவின் சாராம்சம். இனி வழக்கு மீண்டும் மே 10ஆம் திகதி எடுக்கப்படும்.

இனித்தான் பிரச்சினை இருக்கின்றது.

கலால் ஒழுங்கு விதிகள் மிக இறுக்கமானவை. மத ஸ்தலங்களுக்கு பக்கத்தில், பாடசாலைகளுக்கு அருகில் மதுபான சாலைகளை அமைக்க உரிமங்கள் வழங்கப்படக் கூடாது, ஒருவருக்கு பல உரிமங்கள் வழங்கக் கூடாது என்றெல்லாம் பல விதிமுறைகள் உண்டு. அவற்றை மீறியே இவை இதுவரை காலமும் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி வழங்கப்பட்ட உரிமங்களின் விவரம் இனி விலாவாரியாக – மீறல் விவரங்களுடன் – நீதிமன்றுக்குப் போக, ஒவ்வொரு உரிமமாக 'அவுட்' ஆகும் சாத்தியங்கள் அதிகம் உண்டு.

இந்த இடைக்கால உத்தரவைப் பெற நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தியவர்களில் முக்கியமானவர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

இதில் அவர் பல 'ஸேம் ஸைட் கோல்களை' அடித்திருக்கின்றார். இப்படி பின் கதவால் மதுபான சாலை உரிமங்களை 'பினாமி' பெயர்களில் பெற்று பட்டுவாடா செய்து உழைத்தவர்களில் தமிழ் கூட்டமைப்பின் சகாக்கள் மட்டுமல்லர், தேசியத்துக்காக துதிபாடும் அவரது கட்சியின் சகாக்களும் உள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே கட்சிக்குள் நன்கு வாங்கிக் கட்டியிருக்கும் சுமந்திரன் வெளியே தெரியாத – தெரிவிக்க முடியாத – இந்தக் 'குற்றத்திற்காகவும்' இனி வாங்கிக் கட்டுவார்.

உரிமங்களின் பெயரில் மில்லியன்களைச் சம்பாதித்தோர் நீதிமன்ற இக்கட்டால் திருடனுக்குத் தேள்கொட்டிய மாதிரித் துடித்துப் போவர். ஆனால் அடங்கிவிடார். நிச்சயம் சுமந்திரனுக்கு இதற்காக ஆப்பு உண்டு. அவர் அவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதுதான்...!

## வடக்கில் அநுரவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தால், அநுரகுமாரவின் வருகை தொடர்பான போஸ்டர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளின் மதில்களில், வாசல்களில் ஒட்டப்பட்டுள்ளன.

பாடசாலை மதில்களில் இவ்வாறான போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளமை தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. அவற்றை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# அநுராதபுரம், மாத்தறை பகுதிகளில் மசாஜ் நிலையங்கள் சுற்றிவளைப்பு

அநுராதபுரம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக இயங்கி வந்த மசாஜ் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் நான்கு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 4 பெண்களும் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பில் பரிசோதிக்க வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மாத்தறை பிரதேசத்தில் உள்ள சட்ட விரோத மசாஜ் நிலையங்களில் பணிபுரியும் 12 பெண்கள் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கைது செய்யப்பட்ட பெண்கள் காலி, கேகாலை ,கொழும்பு , புத்தளம் மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.



# உயிரிழந்த மூதாட்டியின் கைப் பெருவிரலில் மை!

## பொலிஸார் விசாரணை



யாழ். மானிப்பாய் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் திடீர் சுகவீனம் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த மூதாட்டியின் கை பெரு விரலில் மை இருந்தமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மூதாட்டியின் சொத்துக்களைச் சட்டவிரோதமாக பெற்று இருக்கலாம் எனும் சந்தேகத்திலையே பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் , உயிரிழந்த பெண்ணின் மகன் வெளிநாட்டில் இருந்து, வைத்தியசாலை பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு , "தாயிடம் இருந்து சிலர் சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை எழுதி வாங்கியுள்ளனர் என எனக்கு தகவல் கிடைத்துள்ளது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்" – எனக் கூறியுள்ளார்.

அதனை அடுத்து , பணிப்பாளர் சட்ட வைத்திய அதிகாரிக்கு இந்த விடயத்தினை தெரியப்படுத்தியுள்ளார். அத்துடன் திடீர் மரண விசாரணை அதிகாரியும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

அதன் போது பெண்ணின் கை பெருவிரலில் மை அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பொலிஸார் உயிரிழந்த பெண்ணை பராமரித்தவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த வேளை தாம் வைத்தியசாலையில் பெண்ணை அனுமதிக்கும் போது பெருவிரலில் மை அடையாளம் இல்லை எனவும் , பின்னர் எப்படி வந்தது என தமக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, வெளிநாட்டில் வசிக்கும் உயிரிழந்த பெண்ணின் மகன் வைத்தியசாலைக்கு நேரில் வருகை தந்து பெண்ணை அடையாளம் காட்டிய பின்னரே உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படும் எனவும், அது வரை சடலம் பிரேத அறையில் பாதுகாப்பாக வைத்திருக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் பிரகாரம், புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 2 மாதங்களுக்குள் 1948 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 7 முதல் 9 தேசிய மற்றும் சர்வதேச அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படும். இதன் மூலம் கடந்த கால மற்றும் தற்போதைய காலகட்டத்தின் முழு பாதுகாப்பு வேலைத் திட்டம் குறித்து ஆய்வு செய்து, எந்தவொரு நிறுவனத்திலும் எந்தவொரு நபரிடமும் எவ்வித தடையுமின்றி வாக்கு மூலங்களைப் பெற்றுக்கொள்ள இந்த ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆணைக்குழுவை நிறுவிய 6 வாரங்களுக்குள் அதனுடன் இணைந்து பணியாற்ற ஸ்கொட்லாந்து யாட், எப்.பி.ஐ. வெளிநாட்டு புலனாய்வு மற்றும் பாதுகாப்பு சேவைகள், தேசிய புலனாய்வுத்துறை மற்றும் பாதுகாப்பு தரப்புகளைக் கொண்ட நிரந்தர விசாரணை அலுவலகம் நிறுவப்படும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகளுக்கு உட்பட்டு இலங்கையின் சட்டங்களின் கீழ் குற்றப்பத்திரிகைகளைச் சமர்ப்பிக்க அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்டமா அதிபருக்குக் கட்டாயமாக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 7 (2) அல்லது பிரிவு 24 திருத்தப்படும். மேற்கண்ட குற்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் மீது தீர்ப்பு வழங்க நிரந்தர உயர்நீதிமன்றம் நிறுவப்பட வேண்டும். இதற்காக 1978 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நீதித்துறை கட்டமைப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

## இன்று இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முருகன், ரொபட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் இன்று இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இன்று முற்பகல் 11.30 மணிக்கு இவர்கள் மூவரும் வந்தடைவார்கள் என்று முருகன் சார்பில் வழக்காடிய சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 33 ஆண்டுகள் வரையில் சிறையில் இருந்த அனைவரும் 2022 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதில் சாந்தன் நோய்வாய்ப்பட்ட நிலையில், கடந்த மாதம் உயிரிழந்ததை அடுத்து அவரது உடல் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு யாழ். வடமராட்சியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில், ஏனைய மூவரையும் விரைவில் இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்ற நிலையில், மூவரும் இன்று இலங்கைக்கு அழைத்துவரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித் அடித்த துருப்புச் சீட்டு

இலங்கையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சர்ச்சைக்குரிய விடயமாக நீடித்து வரும் ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் விவகாரம் தொடர்பில் தமது துருப்புச்சீட்டை நாடாளுமன்றத்தில் நேற்றுத் தூக்கி அடித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இந்தத் தாக்குதல் தொடர்பில் நீதி, நியாயமான விசாரணைகள் நடைபெறவில்லை, உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கு நேர்மையான விசாரணைகள் நடைபெறவில்லை, ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் உண்மைகளை மூடி மறைப்பதில் தீவிரமாக இருக்கின்றார்கள் என்ற எண்ணப்பாங்கே - கருத்து நிலையே - பொதுவாக மக்கள் மத்தியில் நீடித்து வருகின்றது. ஒரு வகையில் அதுதான் யதார்த்தப் புற உண்மையும் கூட.

கிறிஸ்தவ மக்களின் மதத் தலைவரான கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கூட இந்த விடயத்தை வாய் ஓயாமல் பல தடவைகள் வெளிப்படையாகவும், துணிச்சலாகவும், அப்பட்டமாகவும் வெளிப்படுத்தி வந்துள்ளார்.

இந்த விடயத்தை ஒட்டி அரசு என்ன செய்யப் போகின்றது என நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அரசிடம் விவரமான கேள்விகளைத் தொடுத்திருந்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவற்றுக்கு நேர் சீரான பதில் எதுவும் அரசு தரப்பில் இருந்து பொறுப்பான முறையில் வராத நிலையில் வரும் ஜனாதிபதி தேர்தலில் தாம் ஜனாதிபதியாகத் தெரிவானால் இந்த விடயம் குறித்து தாம் என்ன நடவடிக்கையை எப்படி எடுப்பார், விடயத்தை எப்படிக் கையாள்வார் என்பவற்றைக் கால அட்டவணையோடு நேற்று நாடாளுமன்றத்தில் தெளிவாகவும் விரிவாகவும் வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் விவரித்து இருக்கின்றார் அவர்.

ஈஸ்டர்குண்டுத்தாக்குதல்குறித்துஸ்கொட்லண்யார்ட் பொலிஸ் மூலம் விசாரிப்பேன் என்று முன்னர் புளுகிய ரணில் விக்கிரமசிங்க, இப்போது ராஜபக்ஷக்களின் தயவில் ஜனாதிபதியாகி, அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் ராஜபக்ஷக்களின் தயவில் தங்கி நிற்கின்றமையால் ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு விரல் நீளும் இந்த விடயத்தை, நிலவிரிப்புக்குள் போட்டு மூடி மறைத்து அமுக்க எத்தனிக்கின்றார்.

சஜித்தின் நேற்றைய நாடாளுமன்றக் கூற்றுப்படி -

புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு மாதங்களுக்குள் 1948ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ், 7 முதல் 9 தேசிய மற்றும் சர்வதேச அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படும். இதன் மூலம் கடந்த கால மற்றும் தற்போதைய கால கட்டத்தின் முழுப் பாதுகாப்பு வேலைத் திட்டம் குறித்து ஆய்வு செய்யப்படும். எந்தவொரு நிறுவனத்திலும் எந்தவொரு நபரிடமும் எவ்வித தடையுமின்றி வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ள இவ்வாணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்படும்.

ஆணைக்குழுவை நிறுவிய 6 வாரங்களுக்குள் அதனுடன் இணைந்து பணியாற்ற ஸ்கொட்லண்யார்ட், எவ்.பி.ஐ. வெளிநாட்டுப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புச் சேவைகள், தேசிய புலனாய்வுத் துறை மற்றும் பாதுகாப்பு தரப்புகளைக் கொண்ட நிரந்தர விசாரணை அலுவலகம் நிறுவப்படும். ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மற்றும் உத்தரவுகளுக்கு உட்பட்டு இலங்கையின் சட்டங்களின் கீழ் குற்றப்பத்திரிகைகளைச் சமர்ப்பிப்பது அல்லது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்டமா அதிபருக்குக் கட்டாயமாக்கப்படும்.

1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 7 (2) அல்லது பிரிவு 24 திருத்தப்படும். மேற்கண்ட குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது தீர்ப்பு வழங்க நிரந்தர உயர்நீதிமன்றம் நிறுவப்பட வேண்டும். இதற்காக 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறை கட்டமைப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமா அதிபரை சாராத அரச தரப்பு வழக்கறிஞர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்ட மூலமும் கொண்டு வரப்படும். - என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த அறிவிப்பின் உள்சூக்குமங்களை பிறிதொரு நாளில் பார்ப்போம்.

# துருக்கியில் இரவு விடுதி ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 29 பேர் பலி



துருக்கியில் இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 29 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த அனர்த்தம் இஸ்தான்புல்லில் உள்ள ஒரு உயரமான கட்டடத்தின் அடித்தளத்தில் அமைந்துள்ள இடத்திலேயே ஏற்பட்டுள்ளதாக இஸ்தான்புல் ஆளுநர் தாவுட் குல் தெரிவித்துள்ளார்.

எனினும் தீ விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீ விபத்தில் உயிரிழந்தவர்கள் ஊழியர்கள் என்றும் ஆனால் அவர்கள் ஒப்பந்தகாரர்களா அல்லது இரவு விடுதியின் ஊழியர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக 5 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் தொடர்கின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களில் மூன்று பணியிட அதிகாரிகள், இரவு விடுதி மேலாளர் மற்றும் புதுப்பித்தல் மேலாளர் ஆகியோர் அடங்குகின்றனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# பின்லாந்தில் மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

பின்லாந்து ஆரம்ப பாடசாலையொன்றில் துப்பாக்கிச் சூட்டு இடம்பெற்றுள்ளதால், அங்கு பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், பின்லாந்தில், வன்டா நகரில் உள்ள பள்ளி ஒன்றில் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில் 12 வயதுடைய 3 மாணவர்கள் காயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

12 வயது மாணவன் ஒருவனால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. மேற்படி மாணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, அந்த பாடசாலையில் 800 மாணவர்களும் 90 ஊழியர்களும் இருந்தனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.






# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத் தீர்வு காணவேண்டும்

## சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தல்





தமிழக மீனவர்களின் அவல நிலையை கருத்திற் கொண்டு இலங்கையுடன் கலந்துரையாடி இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கான தீர்வினைக் காண வேண்டும் என மத்திய அரசை சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

தமிழக மீனவர்கள் நல அமைப்பு சார்பில் அதன் தலைவரான பீட்டர் ராயன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு, படகுகள் பறிமுதல் செய்யப்படுவதைத் தடுக்க மத்திய, மாநில அரசுகள் எந்தவொரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் முன்னெடுப்பது இல்லை எனவும் இதனால் தமிழக மீனவர்களின் குடும்பத்தினர் துயரங்களை எதிர்நோக்கி வருவதாகவும் மேற்படி மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள், படகுகள் உள்ளிட்ட உடைமைகளை விடுவிக்கவும், இந்த விவகாரத்தில் நிரந்தரத் தீர்வு காணவும் மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையே நீண்ட காலமாக நிலவி வரும் மீன்பிடி உரிமை, கச்சத்தீவு தொடர்பான பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில், இரு நாட்டு மீன்வளத்துறை செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அங்கம் வகிக்கும் கூட்டு பணிக்குழுவின் 6 ஆவது கூட்டத்தை இந்தியா சார்பில் கூட்ட வேண்டும் என குறித்த பதில் மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனை ஆராய்ந்த நீதிபதிகள், இந்த வழக்கை எதிர்வரும் ஜுன் மாதத்திற்கு ஒத்திவைத்துள்ளனர்.

அதற்குள் தமிழக மீனவர்களின் அவல நிலையை மத்திய அரசு கருத்தில் கொண்டு, இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டுப்பணிக்குழு கூட்டத்தைக் கூட்டி, இலங்கையுடன் கலந்துரையாடி மிக விரைவாக பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என நீதிபதிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

# இலங்கையைக் கண்டிப்பதற்கு மோடிக்கு துணிச்சல் இல்லை

## முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு




“பிரதமர் மோடிக்கு இலங்கையைக் கண்டிக்கவும் துணிச்சல் இல்லை, சீனாவை எதிர்க்கவும் துணிச்சல் இல்லை. இந்த லட்சணத்தில் நீங்கள் கச்சத்தீவைப் பற்றிப் பேசலாமா?”

- இவ்வாறு வேலூரில் நடந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேலூர் கோட்டை மைதானத்தில் நேற்று நடைபெற்ற இண்டியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

“கடந்த பல ஆண்டுகளாக கச்சத்தீவு பற்றி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியபோதெல்லாம், அதற்கு உரிய பதிலைச் சொல்லவில்லை. எத்தனையோ பேர் ஆர்.டி.ஐ. விண்ணப்பம் செய்தபோதும் தெளிவான தகவல்களைக் கொடுக்கவில்லை. உச்ச நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது என்று பதில் சொல்லாமல் இருந்த பா.ஜ.க. அரசு, இப்போது ஆர்.டி.ஐ. மூலம் எப்படி தவறான தகவலைக் கொடுத்தார்கள்? பா.ஜ.கவைச் சேர்ந்த ஒரு தனிநபருக்கு எப்படி, வெளியுறவுத் துறை நாட்டின் பாதுகாப்பு தொடர்பான ஆவணங்களைக் கொடுத்திருக்கிறார்கள்?

நான்காவது, கச்சதீவுக்காக இப்போது திடீர் கண்ணீர் வடிக்கும் பிரதமர் மோடி, கடந்த பத்தாண்டுகளில் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு மீனவர்கள் கைது, துப்பாக்கிச்சூடு என்று நடந்ததே? ஒரு கண்டிப்பாவது இலங்கைக்குச் செய்தாரா? ஏன் செய்யவில்லை? இப்போது, சீனா பற்றியாவது வாய்திறந்தாரா? அருணாசலப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்குச் சீனா சொந்தம் கொண்டாடுகிறதே? 30-க்கும் மேற்பட்ட நம்முடைய இடங்களுக்குச் சீனமொழியில் பெயர்களை வெளியிட்டிருக்கிறதே? அதற்கு என்ன சொல்லப் போகிறீர்கள்? இலங்கையைக் கண்டிக்கவும் துணிச்சல் இல்லை, சீனாவை எதிர்க்கவும் துணிச்சல் இல்லை. இந்த லட்சணத்தில் நீங்கள் கச்சத்தீவைப் பற்றிப் பேசலாமா?”- என்றார்.



# கொழும்பு வலய முஸ்லிம் பாடசாலைகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிட்டும்

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு வலயத்திலிருக்கும் முஸ்லிம் பாடசாலைகளின் பிரச்சினைகள் குறித்து தேடியறிந்து அவற்றுக்கு விரைவில்தீர்வைபெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் எதிர்கொள்ளும் கல்விசார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் பாடசாலைகள் அதிபர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

ஆசிரியர் பற்றாக்குறை, இடநெருக்கடி, வகுப்பறைகள் தட்டுப்பாடு, சிங்கள மூலம் இஸ்லாம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் இன்மை, அதிகமாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பாடசாலைகள் இன்மை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு இஸ்லாம் பாடம் கற்பிக்க ஆசிரியர் இன்மையினால் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

கொழும்பிலுள்ள 19 முஸ்லிம் பாடசாலைகளில் சுமார் 200 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக அதிபர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். அவற்றை தீர்ப்பது பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு இரு வருடப் பயிற்சி வழங்கி நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பில் சில பிரதேசங்களில் முஸ்லிம் பாடசாலைகள் இன்மையால் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் இருந்து விலகிச் செல்வது குறித்தும் சில பாடசாலைகளில் இடவசதி, மைதானவசதி இன்மை தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. சில பாடசாலைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு உகந்த காணியை வழங்குவது தொடர்பில் ஆராயுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இடவசதி குறைபாட்டிற்கு தீர்வாக புதிய பாடசாலை கட்டடங்களை நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் நிர்மாணிப்பதில் உள்ள தடைகளை தீர்ப்பது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் தெரியவந்த சில பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிவிக்குமாறு கல்வி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், முஸ்லிம் பாடாசலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இம்மாத இறுதியில் மீண்டும் சந்தித்து மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது அறிவித்தார்.

இதன்போது உயர் தரம் கற்க தெரிவாகியிருக்கும் மாணவர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்க வேண் டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.









# ரயில் சமிக்ஞைக் கட்டமைப்பை வழங்குவதற்கு இந்தியா இணக்கம்

மஹவ முதல் அனுராதபுரம் வரை நிர்மாணிக்கப்படுகின்ற புதிய ரயில் மார்க்கத்திற்காக புதிய சமிக்ஞை கட்டமைப்பை வழங்க இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

புதிய சமிக்ஞை கட்டமைப்பு கணினியினூடாக செயற்படுத்தப்படவுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யூ. பண்டார தெரிவித்துள்ளார்.

இதற்காக 15 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப் படவுள்ளது.

இந்திய கடனுதவியின் கீழ் இந்த சமிக்ஞை கட்டமைப்பு நாட்டிற்கு கிடைக்கவுள்ளது.

இது தொடர்பில் இந்திய பிரதிநிதிகளுடன் அண்மையில் தாம் இந்தியாவில் கலந்துரையாடல் மேற்கொண்டார் என ரயில்வே பொது முகாமையாளர் எச்.எம்.கே.டபிள்யூ. பண்டார தெரிவித்துள்ளார்.





# சில அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளன

எதிர்வரும் பண்டிகைக்காலத்தை முன்னிட்டு அத்தியாவசிய பொருள்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட வுள்ளன.

லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் இந்தத் தகவலை வெளியிட்டுள் ளார்.

இதன்படி, பெரிய வெங்காயம், சிவப்பு வெங்காயம், கடலை, உருளைக் கிழங்கு, லங்கா சதொச பால்மா, கோதுமை மா, இறக்குமதி செய்யப்பட்ட முட்டை, வெள்ளை அரிசி, சோயா மீட் ஆகியவற்றின் விலைகள் குறைக் கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது.

# இரண்டாயிரம் தொன் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி

2,000 மெட்ரிக் தொன் உளுந்து இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பண்டிகைக் காலங்களில் உளுந்து தட்டுப்பாடு ஏற் படுவதைத் தடுக்கவும், விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும் விசேட பண்டவரி சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள வரிகளுக்கு உட்பட்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரச வர்த்தக கூட்டுத்தாபனம், தேசிய உணவு அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை ஹதபிம அதிகாரசபை ஆகியவற்றின் ஊடாக மாத்திரம் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.





# 8 லட்சம் மாணவிகளுக்கு சுகாதார அணையாடைகள்

பாடசாலை மாணவிகளுக்கு இலவச சுகாதார அணையாடைகள் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது.

இலங்கையில் மொத்தமாக 4 மில்லியன் பாடசாலை மாணவர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் 1.2 மில்லியன் மாணவிகள் உள்ளனர்.

இவர்களில் மிகவும் பின்தங்கிய பாடசாலைகள், அனுகல் வசதி குறைந்த பாடசாலைகள், தோட்டப் பாடசாலைகள் மற்றும் வறுமைப்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் 8 லட்சம் மாணவிகளுக்கே சுகாதார அணையாடைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஆண்டுதோறும் சுகாதார அணையாடைகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# ஊழியர்கள் பற்றாக்குறையால் கடித விநியோகத்தில் தாமதம்

தபால் விநியோக ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் கடித விநியோகத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்பில் தபால் மா அதிபர் பி.சத்குமார கருத்து தெரிவிக்கையில், தபால் விநியோக ஊழியர்களின் பற்றாக்குறையினால் சில நாள்கள் தாமதத்தின் கீழ் சில மாகாணங்களில் கடிதங்களை விநியோகிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனக் கூறினார்.வலயங்களாகப் பிரித்து கடிதங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.




தபால் விநியோக ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 2,000 ஊழியர்களுக்கு வெற்றிடம் காணப்படுவதாக தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளமை மற்றும் புதிய அதிகாரிகள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படாமை ஆகிய காரணங்களால் தபால் சேவையில் சில நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புதிதாக விரிவுரையாளர்களை இணைத்துக்கொள்ள அனுமதி

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகவல்

பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக விரிவுரையாளர்களை இணைத்துக் கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கணிசமான விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.இதன் காரணமாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தைக் கருத்திற்கொண்டு புதிதாக விரிவுரையாளர்களை இணைத் துக்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.




இதனிடையே, அனைத்து பல்கலைக் கழகங்களிலும் பணியாற்றிய 6,200 விரிவுரையாளர்களில் கணிசமானோர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.




# நீங்கள் வாக்களித்த கருணா எங்கே? கல்முனையில் அரியநேந்திரன் வினா!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்ட தவறுக்காக கடந்த தேர்தலில் தண்டனை தந்தீர்கள். அதற்காக கருணாவுக்கு வாக்களித்தீர்கள். இன்று ஜனாதிபதியின் ஆலோசகர் என்றும் படையணி திரட்டுகின்றார் என்றும் அவர் கூறுகிறார். இப்பொழுது நீங்கள் போராடுகிறீர்கள். எங்கே அந்தக் கருணா?

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் கல்முனை ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையில் கருத்துரைக்கையில் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று செவ்வாய்க்கிழமை 9 ஆவது நாளாக தமிழ் மக்களது போராட்டம் தொடர்கிறது.

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா. ஸ்ரீநேசன், பா.அரியநேந்திரன் ஆகியோர் நேற்றைய போராட்டத்தின் போது சமுகமளித்திருந்தார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலையில் அரியம் மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:–

கடந்த முறை இங்கு நீங்கள் உண்ணாவிரத போராட்டத்தை மேற்கொண்ட பொழுது ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தின் பிரதமராக இருந்தார். அவர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் ஒப்பத்தோடு இங்கு கணக்காளரை நியமிப்பதற்காக ஹெலிக்கொப்டரில் இங்கே அதனை அனுப்பி வைத்திருந்தார். அது ஒரு திட்டமிட்ட நாடகம்.

அது அடுத்த நிமிஷம் காற்றோடு கலந்தது. ஏமாறினோம். அதே ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கின்றார்.

அன்று இப்படியான கணக்காளர் நியமனப் போலிக் கடிதத்தை சமர்ப்பித்த ரணில் விக்கிரமசிங்க அன்று ஏமாற்றியவாறு இம்முறை ஜனாதிபதியாக இருக்கின்ற பொழுதும் ஏமாற்றுவாரா என்பது தமிழ் மக்களுக்கு சந்தேகமாக இருக்கின்றது.

நல்லாட்சியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை நிரந்தரமாக்குவதற்கான வாக்குறுதியை அளித்திருந்தும் இன்னும் அது நிறைவேறவில்லை.

மாறாக இங்கு அதிகாரம் பிடுங்கப்படுகிறது. இதற்கு அடிப்படைப் பின்னணியிலே சில இஸ்லாமிய அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். அதற்கு உயர் அதிகாரிகள் சிலரும் துணை போகிறார்கள்.

இன ரீதியாக தமிழர்கள் ஒடுக்கப்படுகின்றார்கள்.

நாம் – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து இருக்கிறோம். அந்த வழக்குத் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற வேளையிலே இந்த அதிகாரங்களை பிடுங்குவதற்கு இந்த அரசாங்க அதிபரோ அல்லது ஏனையோரோ யார் என்பதைக் கேட்க விரும்புகின்றோம் .

இந்த நீதிமன்றத்தை அவர்கள்தான் அவமதிக்கிறார்கள்.

நாம் இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் தொடர்ச்சியாக பூரணமாக உரிமைக்காகப் பயணிப்போம்.

நாடாளுமன்றத்தில் உள்ள எல்லாத் தமிழ் உறுப்பினர்களையும் நாங்கள் நம்புகின்றோம் என்றல்ல. தமிழ் தேசியத்துடன் சேர்ந்த 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்காக என்றும் குரல் கொடுப்பார்கள். அண்மையில் இந்தியாவிலே சிறையில் அடைக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் இடம் கையெழுத்திட்டு கையளித்து இருந்தார்கள். அதே தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்களுக்கு உதவுவார்கள் என்பது நம்பிக்கையாக இருக்கின்றது.

ஆனால் டக்ளஸ், பிள்ளையான், வியாழேந்திரன் போன்றவர்கள் தமிழர்கள் அல்லர். அவர்கள் பெயருக்குத்தான் தமிழர்களாய் இருக்கிறார்கள் .

24 மணி நேரத்தில் இதனைத் தரமுயர்த்தித் தருவோம் என்று அன்று இங்கு வந்த பிள்ளையான் கூறினார். முழு கிழக்கையும் முடக்குவோம் என்று வியாழேந்திரன் கூறினார். மூன்று நாளிலே இதனை ஏற்படுத்தித் தருவோம் என்று கருணா கூறினார் .

இவர்கள் எல்லாம் இன்று எங்கே என்று நான் கேட்கின்றேன் .

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு நீங்கள் வாக்களித்தாலும் வாக்களிக்காவிட்டாலும் நாங்கள் தொடர்ந்து இதற்காகக் குரல் கொடுப்போம் .

எமது கட்சிக்குள் இருந்து அப்போதிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனை தடுத்திருந்தார்கள். யார் என்பதனை அறிவீர்கள்.

இல்லாவிட்டால் அந்த நேரத்திலே அந்த அந்தஸ்து கிடைத்திருக்கும். இனித் தேர்தல் வரும். திருவிழாவுக்குக் காப்பு கடை போடுவது போன்று தேர்தல் திருவிழாவுக்கு அரசியல்வாதிகளும் இங்கு வரத் தொடங்குவார்கள். அப்பொழுது பார்ப்போம் என்ன நடக்கின்றது என்பதை. – என்றார்.

# கச்சதீவு எப்பவோ முடிந்த காரியம் இனிப் பேசுவதில் அர்த்தம் இல்லை!

## இப்படிக் கூறுகின்றது ஈ.பி.டி.பி.

இருநாட்டு உடன்பாடுகளின் அடிப்படையில் இந்தியாவால் வழங்கப்பட்ட கச்சதீவை இனி இந்தியா மீளப்பெறமுடியாது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். இது தொடர்பில் மேலும் கூறுகையில்–

கச்சதீவு அரசியல் பிரசார மேடை அல்ல. அது இரு நாடுகளின் இணக்கப்பாட்டுடன் இலங்கைக்கு சொந்தமாக வழங்கப்பட்டது ஒரு விடயம். ஆனால் தற்போது இந்திய நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கச்சதீவு விவகாரம் பேசுபொருளாக சூடுபிடித்துள்ளது.

தமிழகம் பாண்டிச்சேரி உட்பட்ட 40 நாடாளுமன்ற தொகுதிகளில் இருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதற்கான தேர்தல் களமாக உள்ள நிலையில் கச்சதீவை இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியே இலங்கையிடம் பறிகொடுத்ததாக அண்மையில் இந்திய பிரதமர் மோடி தமிழ்நாட்டில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இரு நாடுகளுக்கான எல்லை நிர்ணயத்தின்போது கச்சதீவை எந்தப்பக்கம் வைப்பதென்று தீர்மானிக்கும்போது அது இலங்கை பக்கமாக உள்ளடக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் தமிழ் நாடு தேர்தல் களம் முன்னர் எப்போதும் இல்லாதவாறு தற்போது தீவிரமடைந்துள்ள நிலையில் – தமிழநாட்டு மீனவர்கள் இலங்கை மீதும் இந்திய மத்திய அரசின் மீதும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவருகின்ற நிலையில் – கச்சதீவு விவகாரம் தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகளால் தேசியவாத நிகழ்ச்சி நிரலாக மாற்றமடைந்துள்ளது.

ஆனால் கச்சதீவு 1974 ஆம் ஆண்டுமுதல் இலங்கையின் நிலப்பரப்பாகவே இருந்து வருகின்றது. இது தேர்தலுக்கான கோசமே அன்றி வேறொன்றும் கிடையாது.

இதேவேளை இவ்விடயம் இந்திய உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இந்திய மத்திய அரசின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர் இது உடன்பாடுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட விடயம், அதனை இனிப்பெறமுடியாது என்றும் அதனை மீறிப் பெறவேண்டுமாயின் யுத்தம் தான் செய்ய வேண்டும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. – என்றார்.

# கார்த்திகைப் பூ விடுதலைப் புலிகளின் இலச்சினை அல்ல; தமிழ்த் தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளமே!

## சுட்டிக்காட்டுகின்றார் சூழலியலாளர் ஐங்கரநேசன்

கார்த்திகைப் பூவை ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளின் இலச்சினையாகவே பார்க்கிறது. இதனாலேயே தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் இல்லமொன்றை அழகுபடுத்துவதற்காகக் கார்த்திகைப் பூவை வடிவமைத்த மாணவர்கள் காவல் துறையினால் அறிவிலித்தனமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள். கார்த்திகைப் பூவை விடுதலைப் புலிகள் தேசிய மலராகத் தெரிவு செய்திருந்தார்கள் என்பதற்காக அது விடுதலைப் புலிகளை அடையாளப்படுத்தும் பூ அல்ல. அது தமிழ்த் தேசிய இனத்தின் தாயகச் சூழலின் அடையாளம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் பிரபல சூழலியலாளருமான பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டியில் இல்லமொன்று கார்த்தகைப்பூவின் உருவத்தை உருவாக்கி வைத்திருந்தமையால் மாணவர்கள் சிலரும் கல்லூரி நிர்வாகமும் காவல்துறையினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழர்கள் சுற்றுச் சூழலைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைகளாக வகுத்து இயற்கையோடு இசைந்த வாழ்வை மேற்கொண்டு வந்தவர்கள். சங்கத் தமிழர்களால் காந்தள் என அழைக்கப்பட்ட கார்த்திகைப்பூ இப்போதும் தமிழ் வாழ்வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாகவே இருந்து வருகிறது. சங்கக்கவி கபிலர் தொடங்கி தாயகக்கவி புதுவை இரத்தினதுரை வரை கார்த்திகைப் பூவைப் பற்றிப் பாடாத புலவர்களே இல்லையென்னும் அளவுக்குத் தமிழ் வாழ்வியலில் கார்த்திகைப் பூ மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இதன் காரணமாகவே இந்தியாவில் தமிழ்நாடு கார்த்திகைப் பூவைத் தனது மாநில மலராகத் தேர்வு செய்துள்ளது.



ஸ்ரீலங்கா அரசு தனது பௌத்த பண்பாட்டுச் சூழலுக்கு அமைவாகத் தேசிய மலராக நீலோற்பலத்தையும் தேசிய மரமாக மெசுவா எனப்படும் நாகமரத்தையும் தெரிவு செய்துள்ளது. இலங்கைக் காடுகளில் ஒருபோதும் காணப்படாத சிங்கத்தைத் தேசியக் கொடியில் வாளேந்த வைத்த பின்னர் அதனால் இதுவரையில் இலங்கைக்குரிய தேசிய விலங்கொன்றைத் தெரிவு செய்ய முடியவில்லை. இலங்கைத் தேசிய அடையாளங்கள் தமிழ் மக்களை உள்வாங்காது பௌத்த, சிங்களப் பெரும் தேசியவாதத்தின் குறியீடுகளாக அமைந்ததன் விளைவாகவே விடுதலைப் புலிகள் தேசிய மலராக ஈழத்தமிழ்ச் சூழலின் அடையாளமாக விளங்கும் கார்த்திகைப்பூவைத் தெரிவுசெய்ய நேர்ந்தது.

கார்த்திகைப்பூச் செடியிலுள்ள கொல்கிசின் என்னும் நச்சு இரசாயனம் அருமருந்துகளின் தயாரிப்பில் பயன்படுகிறது. இதன் பொருட்டு தமிழகத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிரிடப்படும் கார்த்திகைப் பூச்செடியால் பலகோடி ரூபாய் அந்நியச் செலாவணியாகக் கிடைத்து வருகிறது. ஆனால், கார்த்திகைப்பூச் செடியின் சிறப்புகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ள மறுப்பதாலேயே கார்த்திகைப்பூவுக்கு உத்தியோகப் பற்றற்ற தடையைப் பேணி வருகிறது. இயற்கை அதன் பரிணாமப் பாதைக்குக் குறுக்காக நிற்கும் எதனையும் தூக்கியெறிந்து தன் பல்லினத்தை நிலைநிறுத்தும் பேராற்றல் பெற்றது என்பதை ஸ்ரீலங்கா அரசு நினைவிற் கொள்ளவேண்டும். – என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு சர்வதேசம் தீர்வு தரும் என்று இனியும் தமிழ் மக்களுக்கு உசுப்பேத்த வேண்டாம்

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டு!




பாலஸ்தீன விவகாரத்தில் தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை, எமது இனப்பிரச்சினை தொடர்பில் சர்வதேசம் தீர்வைத் தரும் என மக்களை ஏமாற்றுகின்ற சக்திகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

– இப்படி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பியின்) ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். அது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையைப் பொறுத்தளவில் இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக கூறப்படுகின்ற நிலையில் 'மார்ச் 12 இயக்கம்' இலங்கை எதிர்கொள்ளவுள்ள தேர்தல்களில் போட்டியிடவுள்ள அரசியல்வாதிகள் தேசிய இனப்பிரச்சினைக்கு முழுமையான நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

குறிப்பாக 13 ஆவது திருத்தத்தையாவது உரியமுறையில் அமுல்படுத்த வேண்டும் எனவும் மார்ச்12 இயக்கத்தின் மாநாட்டில் பேராசிரியர் அர்ஜீன பாராக்கிரம வலியுறுத்தியுள்ளார். இதனை ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினராகிய நாம் வரவேற்கின்றோம்.

இதேவேளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நீண்டகாலமாக எமது அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான அடிப்படையாக இந்திய – இலங்கை ஒப்பந்தத்தினூடான மாகாண முறைமையை, குறிப்பாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முன்னெடுப்பதனூடாக எமது அரசியல் தீர்வுக்கான வழியை நோக்கி நகர முடியும் என்பதை வலியுறுத்திவந்திருக்கின்றது.

இதனை அன்று நிராகரித்த பலர் இன்று புதுடில்லிவரை சென்று இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதிலும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் பேசமுனைந்துள்ளனர்.

தற்போது தூய்மையான அரசியல் காலாசாரத்தை ஏற்படுத்துவதற்காக மார்ச் 12 இயக்கம் இதனை வலியுறுத்த முனைந்தமை ஒரு மாற்றத்தின் முதற்படியாகவே எண்ணுகின்றோம்.

இதனையே வடக்கு, கிழக்கை சேர்ந்த சக்திகள் பின்பற்றவேண்டும். மாறாக சர்வதேசம்தான் எமது பிரச்சினைக்கான தீர்வைத்தரும், அல்லது சர்வதேசத்திடம் எமது ஒற்றுமையைக் காண்பிக்க வேண்டும், சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை சொல்லவேண்டும் என மக்களை ஏமாற்றும் – தேசியம் பேசுகின்ற – சக்திகள், பாலஸ்தீனம் தொடர்பாக தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கில் சர்வதேச நீதிமன்றம் எவ்வாறான தீர்ப்பை வழங்கியது என்பதையும் மீளாய்வுசெய்ய வேண்டும்.

ஆகவே காலங்காலமாக தேர்தல் காலங்களில் மக்களுக்கு நடைமுறைச் சாத்தியமற்ற, கவர்ச்சிகரமான, எழுச்சியான, ஆக்ரோசமான கோசங்களை முன்வைப்பதால் எமது மக்களின் அரசியல் உரிமைக்கான தீர்வு பெறுவதற்கான சாத்தியம் இல்லை என்பதை அவர்கள் உணரவேண்டும்.

எனவே எமது நீண்டகால வலியுறுத்தலாக இருந்த மாகாண முறைமையை நடைமுறைப்படுத்த அனைவரும் பங்களிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம். – என்றார்.



# இறக்குமதி செய்யப்படும் முட்டை விலை குறைப்பு

இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றின் விலை 36 ரூபா எனக் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதிக்கு போதுமான முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என லங்கா சதொச நிறுவன தலைவர் பசத யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.




# திருகோணமலை மாவட்டத்தை அந்நிய சக்திகளுக்கு விற்பதா?

## எதிர்த்து அங்கு உண்ணாவிரதப் போராட்டம்

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் அந்நிய சக்திகளின் தலையீட்டையும் மற்றும் திருகோணமலை நகரில் உள்ள சில பிரதேசங்கள் வேறு நாடுகளுக்கு – குறிப்பாக இந்தியாவுக்கு – விற்பனை செய்வதாகத் தெரிவித்து அவற்றை எதிர்க்கும் முகமாக நேற்று திருகோணமலை நகரில் உள்ள மணிக்கூட்டு கோபுர சந்தியில் மக்கள் போராட்ட இயக்கத்தினர் நேற்று முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 4 மணி வரைக்கும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இந்தப் போராட்டம் குறித்து அந்த அமைப்பின் செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தவை வருமாறு:–

எமது வளங்களை ரணில் – ராஜபக்ஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு தாரை வார்ப்பதை ஏற்க முடியாது. மக்களின் சொத்துக்களை, வளங்களை சூறையாட முனைகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் . நாட்டின் முக்கிய வளங்களான துறைமுகங்கள், விமான நிலையம் போன்றன தாரை வார்க்கப் படுகின்றன. திருகோணமலையில் முக்கிய கரையோரப் பிரதேசம் தொடக்கம் கப்பல் துறை வரையான பகுதி அபகரிக்கப்படுகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும். இலங்கை நாடு சர்வதேச நாணய நிதியத்தின் பிடியில் சிக்கி தவிக்கிறது. இதற்கு எதிராகப் போராடியவர்களை கைது செய்துள்ளனர். மக்களுக்கு எதிரான – ஜனநாயகத்துக்கு எதிரான – சட்டங்களை கொண்டு வந்து மக்களை அடக்கி ஒடுக்க முனைகின்றனர். –என்றார்.

இவ்விடயங்களை ஒட்டி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரமும் அங்கு விநியோகிக்கப் பட்டது.



# இன்றைய ராசி பலன்கள் - 03.04.2024




இன்று வளமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். முக்கிய இலக்குகளை அடைவீர்கள். உங்களிடம் இன்று மன நிறைவு காணப்படும்.

பணியில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பண வரவு கண்டு மகிழ்வீர்கள். எதிர்பாராத வகையிலிருந்து பண வரவு கிடைக்க வாய்ப்புள்ளது.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




எதிர்மறையான விளைவுகளை தவிர்க்க அறிவார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அமைதியின்மையை சமாளிக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் பொறுமை அவசியம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேராமல் இருக்க கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத் தகாத சூழ்நிலையை சந்திக்க நேரலாம்.

உங்கள் குடும்பத்தில் எழும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று பண வரவிற்கான அதிர்ஷ்டம் குறைவு. நிதியில் ஸ்திரத்தன்மை காண கையிலுள்ள பணத்தை சேமிக்க வேண்டும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நீங்கள் உயர்நிலை அடைவீர்கள் மற்றும் ஆறுதல் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாகப் பணியாற்ற வேண்டும். தவறுகள் செய்து பின் அவற்றை சரி செய்வதை விட முதலிலேயே தவறுகள் நேரா வண்ணம் பார்த்துக் கொள்வது சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்வுப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி மகிழ்சிகரமாக இருக்காது. பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. பண விஷயங்களை கையாளும்போது கவனமாக பாதுகாப்புடன் கையாளவும்.




இன்று நம்பிக்கை நிறைந்திருக்கும் சூழல் காணப்படும்.உங்கள் இலக்குகளை அடைவதற்கான தைரியமும் உறுதியும் உங்களிடம் காணப்படும். மொத்தத்தில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் தன்னம்பிக்கை நிறைந்திருக்கும்.

நீங்கள் மனதளவில் வலுவுடனும் புத்துணர்ச்சியுடனும் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் சிறந்த தகவல் தொடர்பு கொண்டிருப்பீர்கள். உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

இன்று தேக ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.




நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். இதனால் எளிதாக வெற்றி கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.

பணியில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் பணிகளை உற்சாகத்துடன் எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள முயல்வீர்கள். இந்தப் போக்கு நல்லுறவை வலுப்படுத்தும்.

இன்று பணப்புழக்கம் சரளமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊதியம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்துக் கொள்வது சிறந்தது.

பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். கவனமுடன் பணியாற்றினால் பணியில் ஆர்வம் வளரும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொண்டு உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உறவுக்கு உகந்ததல்ல.

இன்று கணிசமான தொகை பராமரிக்க இயலாது. சம்பாதிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று நல்ல தரமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் காண வேண்டும் என்ற உங்களின் விருப்பம் காரணமாக அதிகமான சிந்தனை காணப்படும். அமைதியாக உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடன் பிரச்சினை வராமல் இருக்க நல்லுறவு கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

அதிக பணம் சம்பாதிப்பது இன்று சிறிது கடினம். நல்ல பணப்புழக்கத்துக்கான அமைப்பு இருக்காது.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடன் உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். உங்களிடம் அதிக ஆற்றலும் விழிப்புணர்வும் காணப்படும். உங்கள் வளர்ச்சியில் உங்களுக்கு மன நிறைவு காணப்படும்.

உங்கள் பணியில் முன்னேற்றகரமான பலன்கள் இருக்கும். அனைத்துப் பணிகளையும் தன்னிச்சையாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று அதிக பணம் காணப்படும். உங்கள் வங்கியில் அதிக பணம் பராமரிப்பீர்கள். இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.01.2024

## தனுசு

உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். பொறுமை யுடன் அணுக வேண்டும். அதற்கேற்றபடி திட்டமிட வேண்டும். வழிபாடு மற்றும் மந்திரங்கள் உங்கள் மனதிற்கு ஆறுதல் அளிக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணியிடத்தில் சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் துணையின் அன்பும் மதிப்பும் பெற நீங்கள் பொறுமை காக்க வேண்டும். உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவு பாதிக்கும். எனவே அதனை தவிர்க்க வேண்டும்.இன்று அதிக செலவுகள் காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

உங்களுக்கு ஒவ்வாமை பாதிப்பு ஏற்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

## மகரம்

இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இன்று கவனமாக திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

இன்று உங்கள் பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

உணர்ச்சி வசப்படுவதனால் உங்கள் துணையுடனான உறவின் இனிமை பாதிக்கும். உங்கள் துணையுடன் நேர்மையாக மனம் திறந்து உரையாடுங்கள்.

இன்று பண இழப்பிற்கு வாய்ப்புள்ளது. எனவே பணத்தை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டும். உங்களுக்கு தொடை வலி ஏற்பட வாய்ப் புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

## கும்பம்

நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெளிப் படையாக இருக்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதனால் உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலையை நீங்கள் சந்திக்க நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சிறப்பாக திட்டமிட வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்த்து அமைதியாக இருப்பதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ளலாம்.பேசுவதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று ஏற்படும் செலவுகள் காரணமாக கவலை ஏற்படும்.சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

## மீனம்

இன்று உங்களுக்கு சிறப்பான நாள். இன்று திறம்பட செயலாற்றுவீர்கள். உங்கள் விருப்பங்களை நிறைவேற் றுவீர்கள். எதிர்காலத்துக்கு திட்டமிடு வீர்கள்.

பணியிடத்தில் நற்செய்தி காத்திருக்கின்றது. உங்கள் திறமைகளை நிரூபிக்க நல்ல வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே இனிமையான தருணங்கள் ஏற்படும். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். இன்று சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்ளும் நிலையில் காணப் படுவீர்கள்.




